**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**I.A. 3/2025 in O.S. No.62/2020**

Dr.P.முத்து.M.S., .... மனுதாரர்/வாதி

/எதிர்/

ராஜா மற்றும் 14 நபர்கள் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதியாக 07.01.2026 அன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.நாகமுத்து, திரு.A.லியோ வின்சென்ட் ராஜ் ஆகியோர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 மற்றும் 9 முதல் 12 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ள நிலையில், 6ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 7, 8, 13, 14, 15ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.முகமது ரியாஸ் அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரது அமைதியான அனுபவத்திலிருந்து வரும் தாவாச்சொத்துக்களில் வழக்கு நிலுவையில் உள்ள போதே அத்துமீறல் செய்து சூழ்நிலை மாறுதல் நிலை(Change of Circumstances) ஏற்பட்டுள்ளதால் தாவாச்சொத்துக்களில் பிரதிவாதிகளோ, அவர்வகை மனிதர்களோ மனுதாரருக்கு இடைஞ்சல் செய்யவோ, அத்துமீறி கட்டிடம் கட்டவோ தாவாச்சொத்துக்களை பொறுத்து பிறத்தியில் பதிவுகள் ஏற்படுத்தவோ கூடாது என்ற வகைக்கு வழக்கு

முடியும் வரை ஒரு இடைக்கால தடையாணையை மனுதாரருக்கு ஆதரவாக பிறப்பித்து உத்தரவிடவேண்டி ஆர்டர் 39 ரூல் 1 & 2 மற்றும் 151 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவுரை சுருக்கம்**

மனுதாரர் தாவாச்சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகளுக்கெதிராக விளம்புகை மற்றும் நிரந்தர தடையாணை மற்றும் இதர பரிகாரங்களுக்கு தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலிருந்து வருகிறது.

தாவா சொத்துக்கள் மனுதாரரது தந்தை பெரியசாமி அவர்களால் சம்பாதிக்கப்பட்ட சுயார்ஜித சொத்துக்கள் ஆகும். அச்சொத்துக்களை மனுதாரரது மகன்களும் மற்றும் மனுதாரரது தந்தை பெரியசாமியின் பேரன்களுமான 10 முதல் 12 பிரதிவாதிகள் மைனர்களாக இருந்தபோது மேற்படி "மூன்று பேர்களும் சமபாக ஈவுகளாக அடைந்துகொண்டு அவரவர்களின் பாக சொத்துக்களை அவரவர் ஈடு, ஒத்தி மற்றும் கிரையம் போன்ற எந்தவித வில்லங்கங்களுக்கும் உட்படுத்தாமல் சொத்துக்களை அபிவிருத்தி செய்து அதில் உள்ள வருமானத்தை அனுபவித்து வந்தும் மேல்கண்ட மனுதாரரின் பேரன்கள் மூவரின் ஆயுளுக்குப்பின், அவரவர்களின் வாரிசுகள் சொத்துக்களை வில்லங்கங்களுக்கு உட்படுத்தாமல் அபிவிருத்தி செய்து வருமானத்தை அனுபவித்துக்கொண்டு வரவேண்டியது" என்றும் மேற்கண்ட "மைனர்கள் மேஜராகும் வரை , மைனர்களை பெற்ற தாயாரும் அய்யம்பாளையம் P.முத்துவின் மனைவியுமான ரெத்தினம் கார்டியனாக இருந்து வந்து மைனர்கள் மேஜரானவுடன் சொத்துக்களை ஒப்புவிக்க வேண்டியது" என்று தெள்ளத்தெளிவாக கடந்த 02.09.1989–ல் உயில் எழுதப்பட்டு கடந்த 05.09.1989–ல் திண்டுக்கல் மாவட்டம், அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 3–ம் புத்தகம் 5–ம் தொகுதி 1 முதல் 5 வரை பக்கங்களில் 1989–ம் ஆண்டில் 27–ம் எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரரது தந்தை பெரியசாமியும் கடந்த 07.12.95ல் இறந்துவிட்டார். அதன்பிறகு தாவாச்சொத்துக்களை மனுதாரர், மனுதாரரின் தனித்த அனுபவ, பாத்தியத்தில் வைத்து அனுபவித்து வந்து தாவாச்சொத்துக்களுக்கு நாளது தேதி மனுதாரரது பெயரில் வரி வகையறாக்கள் செலுத்தி வருகிறார்.

இவ்வாறாக தாவாச்சொத்துக்களைப் பொருத்து உயில் பதிவு பெற்றுள்ள நிலையில், மேற்படி உயிலில் கண்டுள்ள வாசக சரத்துக்களுக்கு விரோதமாக தாவா சொத்துக்களை 10 முதல் 12 பிரதிவாதிகள் 9–ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாக தெரிவித்து, தாவா 1–வது அயிட்டச்சொத்தில் அ–அட்டவணை சொத்தை அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலக பதிவு 2117/2008–ன் படி 23.10.08– ல் 1–ம் பிரதிவாதி பெயருக்கு செல்லாத பதிவுக்கிரையம் செய்யப்பட்டுள்ளது.

தாவா 1–வது அயிட்ட சொத்தில் ஆ மற்றும் இ வரிசை சொத்துக்கள் 11–ம் பிரதிவாதி பெயரில் மனுதாரரது சுய சம்பாத்தியத்தில் மனுதாரரின் தந்தை பெயரில் கிரையம் வாங்கப்பட்டதை, 11–ம் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்து என்று தவறாக 1–ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் ஏற்பட்டுள்ளது.

அதேபோல, தாவா 2–வது அயிட்ட சொத்துக்களை 10 முதல் 12 பிரதிவாதிகள் 9–ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாக தெரிவித்து, தாவா 2–வது அயிட்ட சொத்தில் கண்டுள்ள அ–அட்டவணை சொத்தை அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலக பதிவு எண்.1166/2008–ன் படி 16.06.08–லும், தாவா 2–வது அயிட்ட சொத்தில் கண்டுள்ள ஆ–அட்டவணை சொத்துக்களை மேற்படி அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலக பதிவு எண்.1049/2008–ன் படி 25.04.08–லும் 2–ம் பிரதிவாதி பெயருக்கு செல்லாத பதிவுக்கிரையம் செய்யப்பட்டுள்ளது.

தாவா 3–வது அயிட்ட சொத்துக்களுக்கு 10 முதல் 12 பிரதிவாதிகள் 9–ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாக தாவா 3–வது அயிட்ட சொத்துக்களை அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலக பதிவு எண்:2115/2008–ன் படி 28.10.08–ல் 3–ம் பிரதிவாதி பெயருக்கு செல்லாத பதிவுக்கிரையம் செய்யப்பட்டுள்ளது. தாவா 4–வது அயிட்ட சொத்துக்களை 10 முதல் 12 பிரதிவாதிகள் 9ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாக அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலக பதிவு எண்: 2116/2008–ன் படி 28.10.08–ல் 4–ம் பிரதிவாதி பெயருக்கு செல்லாத பதிவுக்கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாவா 5–வது அயிட்டசொத்தில் அடங்கியுள்ள அ–அட்டவணையில் கண்டுள்ள மேற்படி உயில்சொத்தையும் தாவா 5–வது அயிட்டச்சொத்தில் "ஈ" வரிசையில் கண்டுள்ள சர்வே எண்.1137/3–ல் உள்ள சொத்தும், "உ" வரிசையில் உள்ள சொத்தில் சர்வே எண்.1137/5–ல் கண்ட சொத்தும் மனுதாரரது தந்தையான திரு.பெரியசாமி அவர்கள் பெயரில் மனுதாரரின் வருமானத்தில் கிரயம் வாங்கப்பட்ட சொத்து என்பதால், மனுதாரரின் தாயாரோ அல்லது 9–ம் பிரதிவாதியோ அச்சொத்தை மனுதாரரை தவிர்த்து பிறத்தியில் எந்த வகையிலும் யாருக்கும் கிரையமோ அல்லது இதரவகையில் பாராதீனங்களோ செய்ய அருகதையற்றவர்கள். அதே 5–வது அயிட்டச்சொத்தில் கண்டுள்ள தாவா "ஆ" மற்றும் "இ" அட்டவணைச்சொத்துக்கள் மனுதாரரின் வருமானத்தில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்பதால் அச்சொத்துக்களையும் சேர்த்து 9–ம் பிரதிவாதியால் மேற்படி சார் பதிவாளர் அலுவலக பதிவு எண்: 126/2008–ன் படி 24.01.08–ல் 5–ம் பிரதிவாதி பெயருக்கு செல்லாத பதிவுக்கிரையம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி நம்பர் வழக்கு நிலுவையிலிருந்து வரும்போதே தாவாச்சொத்துக்களில் சில சொத்துக்களை பொறுத்து 7, 8 மற்றும்

13 பிரதிவாதிகள் கடந்த 08.03.2023–ல் அய்யம்பாளையம் சார் அலுவலக ஆவணப்பதிவு எண்.623/2023–ன் படியும், 7, 8 மற்றும் 13 முதல் 15 பிரதிவாதிகள் கடந்த 08.03.2023–ல் அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலக ஆவணப்பதிவு எண். 626/2023–ன் படி ஒரு பரக்கதமுபினா என்பவருக்கும். மேற்படி பரக்கரத் முபினா கடந்த 04.05.2023–ல் அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலக ஆவணப்பதிவு எண்.1101/2023–ன் படி ஒரு ஆசாபானு என்பவருக்கும், மேற்படி பரக்கத் முபினா கடந்த 04.05.2023–ல் அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலக ஆவணப்பதிவு எண்.1102/2023–ன் படி ஒரு நியாஜபாத்திமா என்பவருக்கும் செல்லத்தகாத பதிவு ஏற்படுத்தியுள்ளனர். அவ்வாறு கொடுக்கப்பட்ட கிரையமும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

இந்நிலையில் தாவாச்சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகள் பிறத்தியில் எந்தவித கிரையப்பதிவுகளும் ஏற்படுத்தக்கூடாது என்று தடையுத்தரவு பிறப்பிக்கவேண்டி மனுதாரர் மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் W.P.(MD)No.11722 of 2024 and W.M.P. (MD) No.10464 of 2024–ல் கடந்த 05.06.2024–ம் தேதியில் தாவாச்சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகள் அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலகம் மூலம் பிறத்தியில் பதிவுகள் ஏற்படுத்த கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவும் இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் 1 முதல் 5 பிரதிவாதிகள் அவ்வாறு கிரையம் பெற்ற சொத்துக்களில் பகுதி சொத்துக்களை பொறுத்து 6 முதல் 8 மற்றும் 13 முதல் 15 பிரதிவாதிகளுக்கு கொடுத்த செல்லத்தகாத கிரையத்தின் பேரிலும் அதன்தொடர்ச்சியாக மேற்சொன்னபடி சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோதே மேற்சொன்னபடி கிரையம் பெற்ற பரக்கத் முபினா, ஆசாபானு மற்றும் நியாஜபாத்திமா ஆகியோரும் சேர்ந்துகொண்டு

தாவாச்சொத்துக்களில் கடந்த 20.02.2025–ல் அத்துமீறல் செய்து நுழைந்து கட்டிடம் கட்ட முற்பட்டனர். அதனை மனுதாரர் தடுத்துவிட்ட போதும் 1 முதல் 5, 6 முதல் 8 மற்றும் 13 முதல் 15 பிரதிவாதிகள் உள்ளிட்ட மேற்சொன்னபடி கிரையம் பெற்ற பரக்கத் முபினா, ஆசாபானு மற்றும் நியாஜ்பாத்திமா ஆகியோர் தாவாச்சொத்துக்களில் அத்துமீறி கட்டிடம் கட்டவும், உயில் சொத்துக்கள் உள்ளிட்ட சொத்துக்களை மீண்டும் பிறத்தியில் கிரையம் கொடுக்கவும் முற்பட்டு வருகின்றனர். மனுதாரர் புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்துக்கொண்டு 76 வயது கடந்துவிட்ட நிலையில் மருத்துவமனை நடத்தி வருவதால் தாவாச்சொத்துக்களுக்கு அடிக்கடி வந்து பிரதிவாதிகளின் அத்துமீறல்களை தடுக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் ஆள்பலம், பண பலம் மற்றும் அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள் பிரதிவாதிகளை சமூகம் நீதிமன்ற உத்தரவின் மூலம் மட்டுமே கட்டுப்படுத்த முடியும். எனவே, மனுதாரரது அமைதியான அனுபவத்திலிருந்து வரும் தாவாச்சொத்துக்களில் வழக்கு நிலுவையில் உள்ள போதே அத்துமீறல் செய்து சூழ்நிலை மாறுதல் நிலை (Change of Circumstances) ஏற்பட்டுள்ளதுதால் தாவாச்சொத்துக்களில் பிரதிவாதிகளோ, அவர்வகை மனிதர்களோ மனுதாரருக்கு இடைஞ்சல் செய்யவோ, அத்துமீறி கட்டிடம் கட்டவோ தாவாச்சொத்துக்களை பொறுத்து பிறத்தியில் பதிவுகள் ஏற்படுத்தவோ கூடாது என்ற வகைக்கு வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால தடையாணையை மனுதாரருக்கு ஆதரவாக பிறப்பித்து தக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்கிறார்.

எனவே, மனுதாரரது அமைதியான அனுபவத்திலிருந்து வரும் தாவாச்சொத்துக்களில் வழக்கு நிலுவையில் உள்ள போதே அத்துமீறல் செய்து சூழ்நிலை மாறுதல் நிலை (Change Circumstances) ஏற்பட்டுள்ளதுதால் தாவாச்சொத்துக்களில் பிரதிவாதிகளோ, அவர்வகை மனிதர்களோ மனுதாரருக்கு இடைஞ்சல் செய்யவோ, அத்துமீறி கட்டிடம் கட்டவோ தாவாச்சொத்துக்களை

பொறுத்து பிறத்தியில் பதிவுகள் ஏற்படுத்தவோ கூடாது என்ற வகைக்கு வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால தடையாணையை மனுதாரருக்கு ஆதரவாக பிறப்பித்து தக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3). 7,8,13,14,15ம் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பு எதிர்மனுவுரை சுருக்கம்**

1. மனுதாரர்களின் மனுவில், வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும்.

2. மேற்படி கடந்த 21.01.2008–ம் தேதியன்று, திண்டுக்கல் மாவட்டம். ஆத்தூர் வட்டம், அய்யம்பாளையம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.613/2019–ன் அடிப்படையில் தாவா சொத்தானது (5–வது அயிட்ட சொத்து 'அ' 'ஆ' 'ஈ' 'உ) மேற்படி எதிர்மனுதாரர்களுக்கு பத்திர பதிவு செய்யப்பட்டது என்பதே உண்மை. மேலும் அவர்களுடைய பத்திர பதிவின் அடிப்படையில், தற்போது திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம். அய்யம்பாளையம் வருவாய் கிராமத்தில் பட்டா எண் 5938 ஆக பதிவு செய்யப்பட்டு, அது 6ம், 7ம் & 8ம் எதிரமனுதாரர்கள் பெயரில் உள்ளது. இதில் 6ம் எதிர்மனுதாரர் இறந்து விட்டதால், அவர்களுடைய வாரிசுகளான 13ம், 14ம் & 15ம் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்திற்கு உரிமையுள்ளவர்கள் ஆவார்கள். இந்நிலையில் தாவா சொத்தில், எதிர்மனுதாரர்கள் அன்றிருந்து தற்போது வரை சொந்தமாக தென்னை கன்றுகள் வைத்து விவசாயம் செய்து வருகின்றனர்.

3. மேலும் தற்போதுவரை தாவா சொத்திற்கு, 7ம், 8ம், 13ம், 14ம் & 15ம் எதிர்மனுதாரரர்கள் முழு உரிமையாளராக இருந்துகொண்டு, தாவா சொத்தின் உடமைக்கு பாத்தியம் செய்து விவசாயம் செய்து, அதற்கான கிஸ்தி, பட்டா, சிட்டா அனைத்தும் முறையாக வைத்துள்ளனர்.

4. மேலும் தாவா சொத்திற்கான கிஸ்தி, பட்டா, சிட்டா எதுவுமே தற்போது வரை மனுதாரர் பெயரில் இல்லை. அதற்கான எந்த ஒரு ஆவணமும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை.

5. இந்த வழக்கில் உள்ள பதிவு செய்யப்பட்ட தாவா சொத்தினை, எதிர்மனுதாரர்கள் அவர்களுடைய உறவினர்களுக்கு சட்டப்படி மாற்றியிருக்கிறார்கள். மனுதாரர் இந்த விஷயத்தை மறைத்து, நீதிமன்றதில் தாவா சொத்தினை மனுதாரரே அவருடைய அனுபவத்தில் வைத்து விவசாயம் செய்வதாகவும், அவரே அதனை பராமரித்து வருவதாகவும் கூறியது பொய்யாகும்.

6. மேலும் தாவா சொத்தின் உரிமை(Title ownership) சார் பதிவாளர் அலுவலகத்தின் மூலம், முறையாக 3 சட்டதிற்கும், அதன்விதிகளுக்கும் உட்பட்டு மேற்படி எதிர்மனுதாரர்களின் பெயர்களுக்கு பதிவு செய்யப்பட்டு, அதற்கான முத்திரைத்தாள்களும் கொடுக்கப்பட்டு, தற்போது வரை தாவா சொத்தானது எதிர்மனுதாரர்களின் அனுபவத்திலும், பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் உள்ளது. அதற்கான ஆவண சாட்சி என்னவென்றால், தாவா சொத்தினை பஞ்சசீலா காந்தியிடம் 6ம், 7ம் மற்றும் 8ம் எதிர்தரப்பாளர்கள் கிரையமாக பெற்ற ஆவண எண். 613/2009, 614/2009 மற்றும் 615/2009 ஆகும்.

7. மேலும் தாவா சொத்தான 5-வது அயிட்ட சொத்து 'அ' 'ஆ' 'ஈ' 'உ' சொத்திற்கு, மனுதாரருக்கு எந்த ஒரு சொத்துரிமையும் (Title ownership) இல்லை. இவ்வாறு தாவா சொத்தின் மீது சொத்துரிமை இல்லாத போது, மனுதாரருடைய இடைக்கால மனுவை அனுமதிக்க எந்த காரணிகளும் (grounds) இல்லை .

8. மேலும் தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் தற்போது எதிர்மனுதாரர்கள் பெயரில்தான் உள்ளது. இந்நிலையில் தாவா சொத்தினை எதிர்மானுதாரர்கள் அவர்களுடைய உறவினர்களுக்கு கொடுத்துவிட்டபடியால், தற்போது தாவா சொத்து எதிர்மனுதாரர்களின் உறவினர்களின் பெயரில்

உள்ளது. எனவே, மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4). இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5). தீர்வு**

இவ்வழக்கானது உரிமை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக கடந்த 2012ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக இந்த வழக்கு நிலுவையில் இருந்து வந்த நிலையில், வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 39 விதி 1ன் கீழ் மனு தாக்கல் செய்து, இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது, வழக்கிடையில் கிரையம் பெற்ற பரகத்து முபினா, ஆசா பானு மற்றும் நியாஜ் பாத்திமா ஆகியோர்கள் சேர்ந்து தாவா சொத்துக்களின் கடந்த 20.02.2025ல் அத்துமீறல் செய்து, நுழைந்து கட்டிடம் கட்ட முற்பட்டனர். அதை நான் தடுத்து விட்டேன், மற்ற பிரதிவாதிகள் அவர்களின் செயலுக்கு உறுதுணையாக உள்ளார்கள். எனவே, வாதியின் அமைதியான அனுபவத்தை தடை செய்யக் கூடாது என இடைகால தடையாணை உத்தரவு வேண்டியும், வழக்கிடையில் சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்து, வாதி தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றும், வழக்கிடையில் சூழ்நிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்றும், சுவாதீனத்திற்கான எந்த ஆவணமும் வாதியிடம் கிடையாது என்பதால், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தன்னுடைய மனுவில் 20.02.2025 அன்று பரகத்து முபினா, ஆசா பானு மற்றும் நியாஜ் பாத்திமா ஆகியோர் அத்துமீறி தாவா சொத்தில் நுழைந்ததாக சொல்லியுள்ள நிலையில், அதற்கு ஆதரவாக காவல் நிலையத்தில் எந்த புகாரும் வாதியால் கொடுக்கப்படவில்லை. மேலும், நீதிமன்றத்தில் இவ்வழக்கு நிலுவையில் இருந்து வந்த சூழ்நிலையில் 20.02.2025க்கு பிறகு 24.02.2025அன்று இவ்வழக்கின் வாயுதா வந்தபோது, வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்கள். அப்பொழுதும் அந்த தேதியில் மேற்சொன்ன மனுவுடன் சேர்த்து இம்மனுவை தாக்கல் செய்யவில்லை. உண்மையில் மேற்சொன்ன கிரையம் பெற்ற நபர்கள் வாதியின் சுவாதீனத்தை தொந்தரவு செய்திருக்கும் பட்சத்தில், அதற்கான உரிய மனுவை 24.02.2025 அன்று தனக்கு கிடைத்த முதல் வாய்ப்பிலேயே தாக்கல் செய்யவில்லை.

மேலும், ஆக்கிரமிப்பு செய்ய முயன்றதாக அன்றைய தேதியில் குறிப்பாணை கூட வாதியால் தாக்கல் செய்யவில்லை. அதனை தொடர்ந்து இவ்வழக்கானது 03.03.2025, 18.03.2025, 09.06.2025, 13.06.2025, 17.06.2025, 30.06.2025, 10.07.2025, 21.07.2025, 24.07.2025, 29.07.2025, 02.08.2025, 05.08.2025, 18.08.2025, 22.08.2025, 02.09.2025, 09.09.2025, ஆகிய தேதிகளில் வாதி இம்மனுவை தாக்கல் செய்யவில்லை. தொடர்ந்து மேற்சொன்ன நபர்கள் சுவாதீனத்தை 20.2.2025லிருந்த இடையூறு செய்ய முயற்சி செய்திருப்பார்கள் எனும் பட்சத்தில், வாதி தனக்கு கிடைத்த பின்னிட்ட மேற்சொன்ன வாயுதா தேதிகளில் இம்மனுவை தாக்கல் செய்யவில்லை என்பதை பார்க்கும்போது, வாதி இம்மனுவில் கூறியுள்ள உண்மை தன்மை குறித்து நியாயமான சந்தேகம் எழுகிறது.

கடந்த 24.02.2025 அன்று வா.சா.ஆ.1ஐ 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக, இவ்வழக்கு நிலுவையில் இருந்த

நிலையில் கட்டளை 1 விதி 10(2) கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு 02.09.2025அன்று இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து இவ்வழக்கானது 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், வா.சா.1ன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெறாத நிலையில், இந்நீதிமன்றமானது 02.09.2025ம் தேதியிலிருந்து 09.09.2025ம் தேதிக்கு இவ்வழக்கை ஒத்திவைத்து, வாதி குறுக்கு விசாரணைக்காக நேரில் ஆஜராக வேண்டும் என்று இவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் வா.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகததால் மீண்டும் 11.09.2025அன்று வாதி குறுக்கு விசாரணைக்காக ஆஜராக வேண்டும் என்றும், கடைசி வாய்ப்பு என்றும் இவ்வழக்கை ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த மனுவானது 11.09.2025அன்று வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை பார்க்கும்போது, 20.02.2025லிருந்து மேற்சொன்ன நபர்களால் வாதியின் சுவாதீனத்திற்கு இடையுறு இருக்கும் பட்சத்தில், மேற்சொன்ன வாயுதா தேதிகளில் இம்மனுவை தாக்கல் செய்யாமலும், இது குறித்த விபரத்தை நீதிமன்றத்தில் பதிவு செய்யாமலும், காலங்கடத்திவிட்டு இவ்வழக்கு தொடர்ந்து நடைபெற உள்ள நிலையில், வேண்டுமென்றே இந்த இடைகால மனுவை காலம் தாழ்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் முதல் நோக்கு வழக்கு இல்லாமல் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற பிரதிவாதி தரப்பு வாதம் ஏற்புடைய வகையில் உள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இவ்வழக்கில் வாதியின் முந்தைய நடைமுறைகளை பார்க்கும்போதும் எவ்வித முகாந்திரமும் இல்லாமலும் இந்நீதிமன்றம் நம்பதகுந்த மற்றும் ஏற்றுக்கொள்ளதக்க விதத்தில் இம்மனு அமையவில்லை என்பதாலும், வாதி மனுவில் சொல்லியுள்ளது போல, சூழ்நிலையில் எந்த மாற்றமும் நிகழ்ந்துள்ளது என்பதை வாதி தரப்பில் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் சாட்சியங்களை சமர்ப்பிக்காததாலும், வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தூய கரங்களுடன் தாக்கல் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முகாந்திரமின்றி இவ்வழக்கை மேற்கொண்டு நடத்தாமல் இடைகால மனுக்களை இவ்வழக்கில் மேற்கொண்டு தாக்கல் செய்ய முற்படும் பட்சத்தில், இவ்வழக்கை மேலும் தாமதப்படுத்துவதற்காக(causing delay) உரிய செலவுத் தொகையை மறுத்தரப்பினருக்கு செலுத்த நேரிடும் என்று வாதி இந்த உத்தரவின் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்.

**முடிவாக**, மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைகால மனு சட்டப்படியும் பொருண்மைபடியும் நிலைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து நீதியின் நலன் கருதி இம்மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.02.10 16:16:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.